# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*(Accredited with 'A+" Grade by NAAC in the Third Cycle)*

*பல்கலைப்பேரூர்,திருச்சிராப்பள்ளி - 620 024*

*முனைவர் சு. சீனிவாச ராகவன்,* **M.A.,M.L.I.sc.,Ph.D.,**
தேர்வு நெறியாளர்(பொ)

*அலுவலகம்* : 0431-2407016
*தொலைப்படி* : 0431-2407044
*மின்னஞ்சல்* : coe@bdu.ac.in
*வலைத்தளம்* : w.w.w.bdu.ac.in


---

ந.க. எண்.001/தே.நெ/ப.பி/2023 நாள் : 31.07.2023

பெறுநர்

முதல்வர் / துறைத் தலைவர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட
கல்லூரிகள், துறைகள் மற்றும் தொலைதூர மற்றும்
ஆன்லைன் கல்விக்கான மையம்

அய்யா/அம்மையீர்

பொருள்: முப்பத்து எட்டாவது பட்டமளிப்பு விழா - 2023 பட்டம்/பட்டயச் சான்றிதழ் பெறுவதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்புதல் மற்றும் பட்டமளிப்புக் கட்டணத்தை இணையவழியாக செலுத்தக் **(Online payment)** கோருதல் - தொடர்பாக.

-----

பல்கலைக்கழக முப்பத்து எட்டாவது பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டமளிப்பிற்கு தங்கள் கல்லூரியில் பயின்று **Nov.2022 and April 2023**-ல் தேர்ச்சிப் பெற்று பட்டம் பெறத் தகுதிப் பெற்ற மாணவ/மாணவிகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதற்குண்டான கட்டணத்தினை இணைய வழியாக செலுத்தி **(Online payment under the heading – Bulk payment by affiliated Colleges)** e-ரசீதுடன் <u>15.09.2023</u> தேதிக்கு முன்னதாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி (Instructions) தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பட்டச்சான்றிதழ் கட்டணத்தை மாணவர்கள் வங்கி வரைவோலை (Demand Draft) அல்லது இணையதளம் வழியாக (Online Payment) தனித்தனியே செலுத்தி அவற்றை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.** மேலும் பட்டமளிப்பு விழா நடைபெறும் நாள் பற்றிய விபரக்கடிதம் பின்னர் அறிவிக்கப்படும். மேலும், குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட இயலாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புகைக் கடிதம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர் (பொ)

**குறிப்பு:-** பட்டச் சான்றிதழுக்கான கட்டணத்தை தேர்வுக் கட்டணத்தோடு மாணவ / மாணவிகள் ஏற்கனவே செலுத்தியிருந்தால் மீண்டும் பட்டச் சான்றிதழுக்கான கட்டணம் செலுத்தத் தேவையில்லை. பூர்த்தி செய்த பட்டச்சான்றிதழ் விண்ணப்பங்கள், கட்டணம் செலுத்திய இரசீது நகல் மற்றும் உரிய இணைப்புகளுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:-** வழிமுறைகள் (**INSTRUCTIONS**)

**நகல்:** -1. இயக்குநர், தொலைக்கல்வி மையம், }
2. இயக்குநர் தகவலியல் மையம், }
3. இயக்குநர் மாணவர் விவகாரங்கள் பிரிவு } பாரதிதாசன் பல்கலைக்கழகம்
4. கணிணி நிரலர்,தேர்வு நெறியாளர் அலுவலகம் } திருச்சிராப்பள்ளி-24
5. இயக்குநர்,முனைவர்பட்ட ஆராய்ச்சி பிரிவு }
6. உதவிப்பதிவாளர், 'A' Section }

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Accredited with 'A+" Grade by NAAC in the Third Cycle)**

பல்கலைப்பேரூர்,திருச்சிராப்பள்ளி - 620 024

முனைவர் சு. சீனிவாசராகவன், M.A.,M.L.I.Sc.,Ph.D.,
தேர்வு நெறியாளர்(பொ)

அலுவலகம் : 0431-2407016
தொலைப்படி : 0431-2407044
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க. எண்.001/தே.நெ/ப.பி/2023/நாள்:31.07.2023

பெறுநர்

முதல்வர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட கல்லூரிகள்

பொருள்: பாரதிதாசன் பல்கலைக்கழகம் - தேர்வுப் பிரிவு - பட்டச்சான்றிதழ் வழங்குதல் - தொடர்பாக.

\- - -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றுள்ள கல்லூரிகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்குரிய பட்டச்சான்றிதழ்களை பல்கலைக்கழகத்திலிருந்து கல்லூரிகளுக்கு அவ்வப்பொழுது காலதாமதமின்றி விரைந்து அனுப்பப்படும் பொருட்டு கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்படுகிறது.

1. தங்களது கல்லூரியில் பட்டம் / பட்டயம் / சான்றிதழ் படிப்பு பயின்று தேர்ச்சிப் பெற்று, பட்டம் பெறத் தகுதிப் பெற்று, தற்பொழுது விண்ணப்பித்துள்ள மாணவ / மாணவிகளின் புகைப்படம் மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியல் அனைத்தையும் convocation@bdu.ac.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **compress** செய்து **ZIP/RAR** வடிவில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரியில் மாணவ / மாணவிகளின் நலன் கருதி அவர்களின் பெயர்களை (தமிழ் / ஆங்கிலம்) பல்கலைக்கழகப் பதிவேடுகளில் உள்ளது போலும் மற்றும் பதிவெண்களில் இடைவெளி இருப்பின் சரியான முறையில் இடைவெளி விட்டும் இணைப்பில் காணும் வழிமுறைகளின்படி தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. பல்கலைக்கழகத்தில் பட்டச் சான்றிதழ்களுக்கு செலுத்திய கட்டணத் தொகையின் இரசீது நகல் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

4. மாணவ / மாணவியர்களின் பட்டியலின் இறுதிப்பக்கத்தில் பட்டியல் தயாரித்த சரிபார்த்த கல்லூரிப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் கல்லூரி முதல்வர் அவர்களின் முத்திரையுடன் கூடிய கையொப்பமும் இடம் பெற வேண்டும்.

......2

5. பல கல்லூரிகள் ஒரே நேரத்தில் பட்டமளிப்பு விழா நடத்துவதால் பட்டச் சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் நடைமுறை சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தங்களது கல்லூரிப் பட்டச்சான்றிதழ்கள் வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளதா? என்பதை பல்கலைக்கழக பட்டமளிப்புப் பிரிவில் உறுதி செய்து கொண்ட பின்னர், கல்லூரி பட்டமளிப்பு விழா நடைபெறும் நாளை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிற்கான அசல் அழைப்பிதழ் ஒரு வாரத்திற்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

7. கல்லூரியிலிருந்து பட்டச்சான்றிதழ் பெறுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு வருகை தரும் பணியாளர்கள் கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரக் கடிதம் மற்றும் கல்லூரிப் பணியாளர் என்பதற்கான அடையாள அட்டை ஆகியவற்றை அவசியம் கொண்டு வர வேண்டும்.

அனைத்து கல்லூரி முதல்வர்களும் மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் இது தொடர்பான முழு ஒத்துழைப்பினை நல்குமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு நெறியாளர் (பொ)

# BHARATHIDASAN UNIVERSITY
# TIRUCHIRAPPALLI – 620 024

**வழிமுறைகள் (INSTRUCTIONS)**

பல்கலைக்கழக இணைவுப் பெற்ற கல்லூரிகளில் பயின்று **Nov.2022** மற்றும் **April 2023** ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்று **38-வது** பட்டமளிப்பில் பட்டம் பெறத் தகுதியுடைய மாணாக்கர்களின் விவரங்களை மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு கீழ்க்கண்ட முறையில் **Excel Sheet**-ல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. **Centre No. (Centre)**
2. **Student Register Number (Reg.No.)**
3. **Student Name in English** (Example : ANBU KUMAR A ) (Name_en)
4. **Student Name in Tamil** (Example : அன்பு குமார் அ) **(Name_ta)**
   * Initial இரண்டு மொழிகளிலும் மாணவர்களின் பெயருக்கு பின்னால் வரவேண்டும்.
   * மாணவர்களின் தமிழ்ப் பெயர்களை **Arial Unicode MS Font-ல் type** செய்து அனுப்பவும்

(தமிழில் பெயர்களை தட்டச்சு செய்வதற்கான மென்பொருளை **https://www.bdu.ac.in/convocation/convocation-data-submit.php** என்கிற இணையப்பக்கத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்தவும். ஏற்கனவே பதிவிறக்கம் செய்திருந்தால் மீண்டும் செய்ய வேண்டாம். **Arial Unicode MS** எழுத்துருவைப் பயன்படுத்த வேண்டும். வேறு ஏதேனும் எழுத்துருவைப் பயன்படுத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அனுப்ப வேண்டிய மாதிரிப் படிவத்தை **(Sample/Model Excel Sheet)** மேற்குறிப்பிட்ட இணைய முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.)

5. **Name of the Degree with Subject Name (Degree_Subject)**
6. **Month and Year of Passing (Term)**
7. **Candidate Aadhaar No. (ஆதார் எண்) (Aadhaar No)**
8. **Amount Remitted Receipt**

த.பி.பா.

முன்பக்கத்தில் உள்ள 1 முதல் 8 வரையிலான விவரங்களை **C38-XXX-2023 (Nov.2022 & April 2023 Pass out) (XXX-Your Centre Code)** பெயர் கொண்ட **Excel File**-ல் மட்டுமே **type** செய்ய வேண்டும். **(All Degrees in a single excel sheet only,** துறைவாரியாக அல்லாமல்)

9. மாணாக்கர்களின் அண்மையில் எடுக்கப்பட்ட வண்ண புகைப்படம் **(Student Recent Color Photo)**

* அவ்வாறு மாணாக்கர்களின் அண்மையில் எடுக்கப்பட்ட வண்ண புகைப்படங்களை **Regno.jpg** என்று **Scan** செய்ய வேண்டும்.

* புகைப்படமானது

i) 3.5 cm x 4.5 cm Size,
ii) 150 Pixel Width & 200 Pixel Height,
iii) Max.Size 50 KB என்ற முறையில் அனுப்பப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட புகைப்படங்களை **C38-XXX-2023 (Nov.2022 & April 2023 Pass out) (XXX – Your Centre Code)** என்ற பெயர் குறிப்பிட்ட Folder-ல் **(All Degrees Photos in a single folder only. Not Department wise)** தயார் செய்து convocation@bdu.ac.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இரண்டையும் **compress** செய்து **ZIP/RAR** வடிவில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. **(Centre Name, Centre Code, Excel Sheet Name** மற்றும் எண்ணிக்கை, **photo folder name** மற்றும் **jpg** எண்ணிக்கை, மின்னஞ்சல் முகவரி, மின்னஞ்சல் அனுப்பிய தேதி ஆகிய விவரங்களை **separate sheet**-யிலும் மற்றும் **Excel File**-ன் **Hard Copy (Paper Document)** ஆகிய இரண்டையும் " தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி–620 024" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## Check List :

1. **Filled-in-applications**
2. மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிய **Photo folder**
3. மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிய **Excel file Informations**
   **(Sl.No., Centre Code, Register Number, Name of the Candidate in English, Name of the Candidate in Tamil, Name of the Degree with Subject, Month & Year of Passing, Candidate Aadhaar No., Amount Remitted )**
4. **Check list 3-ல்** குறிப்பிட்டவற்றின் **Hard Copy**
5. **Copy of payment E-Receipt**

முக்கிய குறிப்பு:

1. **Excel File**-ல் உள்ள எண்ணிக்கையும், **Photo folder**-ல் உள்ள **jpg** எண்ணிக்கையும் ஒன்றாக இருக்க வேண்டும்.
2. தங்கள் கல்லூரியில் பயின்று தேர்ச்சிப் பெற்று தங்களது கல்லூரியில் நடைபெறவிருக்கின்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அனைத்து மாணாக்கர்களின் விவரத்தை தொகுத்து ஒருமுறை மட்டுமே மேலே குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது..
3. **No additional e-mails for excel sheet and photos.**

தேர்வு நெறியாளர் (பொ)

குறிப்பு: **Nov.2020, April 2021, Nov.2021** மற்றும் **April 2022 Pass out**-க்கு ஏற்கனவே **Excel File** மற்றும் **Photo Folder** அனுப்பியிருந்தால் மீண்டும் மின்னஞ்சல் அனுப்பத் தேவையில்லை.